DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

Depositions of Witness for Prosecution Pw 7
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு. குளத்தூரான் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of January 2026.

**(A1, A2 Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது அய்யாபுரத்தில் வசித்துவருகிறேன். அய்யாபுரம் ரயில்வே கேட் அருகே கோழிப்பண்ணை நடத்திவருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன மாரிச்செல்வம் எனது மகனாவார். எனக்கு முப்புடாதி என்ற மற்றொரு மகனும் உண்டு. ஆஜர் எதிரிகளை தெரியும். எனது மகன்கள் இரண்டுபேரும் எனக்கு உதவியாக கோழிப்பண்ணையை

பார்த்துக்கொண்டிருந்தார்கள். 1ம் எதிரி சரவணன், சொந்தமாக ஜே.சி.பி வாகனம் வைத்துள்ளார்.

சுமார் மூன்றரை வருடங்களுக்கு முன்பு ஒருநாள், அய்யாபுரத்தை தாண்டி மெயின்ரோட்டில் வைத்து எனது மகன் மாரிச்செல்வம் கோழிப்பண்ணைக்கு செல்லும் வழியில் சாஸ்தா கோவில் அருகே எதிரி சரவணன் எனது மகனை வெட்டிக்கொலை செய்துவிட்டார். இந்த சம்பவத்தை நேரில் பார்த்த எனது மூத்த மகன் முப்புடாதி சம்பவம் குறித்து என்னிடம் சொன்னார். உடனே நாங்கள் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு ஆம்புலன்சில் கிடத்தப்பட்டிருந்த எனது மகனின் உடலை பார்த்தோம். எனது மகனின் கை, கை விரல்கள், கழுத்து ஆகிய பகுதிகளில் வெட்டுக்காயம்பட்டிருந்தது. ஆம்புலன்ஸ் அருகே நானும் என்னுடைய உறவினர்களும் நின்று அழுதுகொண்டிருந்தபோது, எங்கள் ஊரை சேர்ந்த பிச்சமுத்து மகன் முப்புடாதி என்பவர் எங்கள் ஊர் காமராஜர் சிலை அருகே எனது மகன் மாரிச்செல்வம் இருசக்கர வாகனத்தில் வந்து நின்றுகொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரி முத்துக்குமார் தன்னுடைய செல்போனில் சரவணன் மாமா, மாரிச்செல்வம் என்னை கண்டபடி பேசிவிட்டான், அவனை இன்று முடித்துவிடவேண்டும் என்று போனில் பேசியதை கேட்டதாக எங்களிடம் சொன்னார். சிறிது நேரத்தில் சரவணன் எனது மகன் மாரிச்செல்வத்தை வெட்டிவிட்டான் என்ற தகவலை கேள்விப்பட்டு முப்புடாதி மருத்துவமனை வந்ததாக என்னிடம் சொன்னார்.

சம்பவத்திற்கு முன்னர் எனது மகன் மாரிச்செல்வத்திற்கும், எதிரி சரவணனுக்கும் ஜே.சி.பி வாகன டயரை சேதப்படுத்தியது சம்பந்தமாக ஒரு பிரச்சனை இருந்துவந்தது. அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்தது. இந்த முன் விரோதத்தின் காரணமாகத்தான் எனது மகன் கொலைசெய்யப்பட்டுவிட்டார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) எனது மூத்த மகன் முப்புடாதிக்கு திருமணமாகவில்லை. எங்கள் கோழிப்பண்ணை, தென்காசி – குற்றாலம் ரோட்டிற்கு மேல்பக்கம் இருக்கிறது என்றால் சரிதான். அதில் சுமார் 2000 கோழிகள் இருக்குமா என்றால் அதைப்பற்றி நியாபகமில்லை. அந்த கோழிப்பண்ணையில் கோழிகளை அடைப்பதற்கு ஒரு ஷெட்டும், நாங்கள் தங்குவதற்கு ஒரு ரூமும் உள்ளது. கோழிப்பண்ணையில் சமையல் செய்வதற்கு அடுப்பு உள்ளது, அதில் காபி போடுவதற்கு மட்டும் வசதி உள்ளது.

2) எங்கள் கோழிப்பண்ணைக்கு அருகே எனது அண்ணன் பாலசுப்பிரமணியத்திற்கு இடம் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்திற்கு அருகே பொன்னுசாமி மகன் சரவணனுக்கும் இடம் உள்ளது என்றால் சரிதான். அந்த சரவணனுக்கும், பாலசுப்பிரமணியத்திற்கும் இடையே ஒரு சிவில் வழக்கு உள்ளது என்றும், அதில் நானும் ஒரு தரப்பினராக உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சரவணனை நானும், எனது மகன் முப்புடாதியும் அடித்ததாக எங்கள் மீது அடிதடி வழக்கு உள்ளது என்றால் நான்தான் சரவணன் மீது புகார் கொடுத்தேன். அதன் அடிப்படையில் பொன்னுசாமி மகன் சரவணன் மீது கடந்த 16.04.2022 ம் தேதி குற்ற எண். 222/2022 என்ற வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான், ஆனால் தற்போது எனக்கும் அந்த சரவணனுக்கும் இடையே எந்த பிரச்சனையும் கிடையாது, நாங்கள் நல்லமுறையில் பேசிக்கொள்வோம். அந்த வழக்கில் இறந்துபோன மாரிச்செல்வமும், எனது மனைவியும் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் எனது மகன் முப்புடாதியும் ஒரு சாட்சியாக உள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3) எனது மகன் மாரிச்செல்வம் மீது 12.04.2022 அன்று ஜெயராம் மனைவி அருணா என்பவர் தனது மகளான சிறுமியிடம் பாலியல் அத்துமீறல் செய்ததாக ஒரு புகார் கொடுக்கப்பட்டு கு.எண்.213/2022 வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான், அந்த வழக்கில் தென்காசி போலீசார்

காலையில் எனது மகனை அழைத்து சென்றுவிட்டு, மாலையில் விடுவித்துவிட்டார்கள்.

4) ராஜாநகர் என்ற இடத்தில் எனக்கு சொந்தமாக ஒரு மாந்தோப்பு உள்ளது என்றால் சரிதான். அதன் பக்கத்தில் எனது தம்பி முறை கொண்ட அருணாச்சலத்திற்கும் தோட்டம் உள்ளது என்றால் சற்று தொலைவில் உள்ளது.

5) இந்த வழக்கு சம்பவத்திற்கு முந்தைய 22.04.2022 அன்று எங்கள் ஊர் காமராஜர் சிலை அருகே எனது சகோதரரின் மகன் முத்துமாரியை பொன்னுசாமி மகன் சரவணனும், ஆதிநாராயணன் மகன் சக்திமுப்புடாதியும் தாக்கியதாக தகராறு நடந்தது என்றால் அதுபற்றி நான் கேள்விப்பட்டேன். அது சம்பந்தமாக அன்று இரவு 02.00 மணியளவில் குற்ற எண். 241/2022 வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6) அதன் பிறகு காயம்பட்ட இசக்கியம்மாளை, இந்த வழக்கின் 2ம் எதிரி முத்துக்குமார் மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இசக்கியம்மாளை எவ்வாறு முத்துக்குமார் மருத்துவமனைக்கு அழைத்துசென்று சிகிச்சையில் சேர்க்கலாம் என்று தகராறு செய்து முத்துக்குமாரை தாக்கியதாக அருணாச்சலம் மற்றும் முத்துமாரி ஆகியோர் மீது குற்ற எண். 243/2022 வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அன்றைய தினம் இரவு அருணாச்சலம் மற்றும் முத்துமாரி ஆகியோர் மீது பொன்னுசாமி மகன் சரவணன் தாக்கியதாக குற்ற எண். 242/2022 வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. காயம்பட்டு கிடந்த எனது சகோதரரை பார்க்க நான் தென்காசி அரசு மருத்துவமனை சென்றேனா என்றால் நான் போகவில்லை.

7) கொலை சம்பவத்திற்கு ஒருவாரத்திற்கு முன்பு, பொன்னுசாமி மகன் சரவணனின் தோட்டத்தின் மோட்டார் மற்றும் பம்பு செட் ரூமை சேதப்படுத்தியதாக என் மீதும் என் மகன் மாரிச்செல்வம் மீதும் பொன்னுசாமி மகன் சரவணன் புகார் கொடுத்து வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் என் மகன் மாரிச்செல்வத்தை மட்டும் அழைத்து போலீசார் விசாரித்தார்கள். எனது

மகன் கொலை செய்யப்பட்டதற்கு முதல் நாள் இரவு நான் தோட்டத்தில் இருந்தேனா என்றால் நான் வீட்டில் இருந்ததாகத்தான் நியாபகம். கோழிப்பண்ணைக்கு அருகிலேயே நாங்கள் ஒரு கறிக்கடையும் வைத்துள்ளோம் என்றால் சரிதான். வழக்கமாக நாங்கள் காலை 6 மணிக்கு கடையை திறந்து மதியம் 3 மணி வரை கறி வியாபாரம் செய்வோம் என்றால் சரிதான்.

8) வழக்கு சம்பவத்திற்கு முந்தைய நாள் இரவு, எங்கள் ஊரில் நடந்த சண்டை நடந்து கலவரம் ஏற்பட்டது தொடர்பாக எங்கள் ஊரில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டார்கள் என்றால் சரியல்ல. ஊரில் கலவரம் ஏற்பட்டதால், போலீசார் எங்கள் ஊர் தெருக்களில் யாரையும் நடமாட அனுமதிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஊரில் ஏற்பட்ட கலவரம் தொடர்பாக சாட்சிகளை விசாரிப்பதற்கும், பார்வை மகசர் தயாரிப்பதற்கும் போலீசார் அன்று முழுவதும் எங்கள் ஊரில் இருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

9) இந்த வழக்கில் சம்பவம் நடந்தவுடன் முதன்முதலில் பொன்னுசாமி மகன் சரவணன் என்பவரை போலீசார் அழைத்து சென்றார்கள் என்றும், அதன் பின்னிட்டு எங்கள் தூண்டுதலின் பேரில் இவ்வழக்கின் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மருத்துவமனையில் வைத்து முப்புடாதி என்னிடம் சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. முத்துக்குமார், சரவணனுக்கு அலைபேசியில் பேசிய விவரத்தை முப்புடாதி என்னிடம் சொன்னபோது அங்கே போலீசார் இருந்தார்கள் என்றால் சரியல்ல. அதன் பிறகு தான் எனது மகன் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றார் என்றால் அதற்கு முன்னரே காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டார். அன்றைய தினம் இரவு 8 மணியளவில் தென்காசி அரசு மருத்துவமனை பிணவறையில் எனது மகனை பார்த்தேன் என்றும், அங்கு போலீசார் விசாரணை செய்தபோது முத்துக்குமார் போன் பேசியது சம்பந்தமாக சொன்னேனா என்றால் அன்றைய தினம் சொல்லவில்லை, மறுநாள் போலீசார் விசாரணையின் போதுதான் சொன்னேன்.

10) வழக்கு சம்பவதினத்தன்று, முத்துக்குமார் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து காவல்நிலையத்தில் ஒரு புகார் அளித்திருந்தார் என்றும் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது மகன் எவ்வாறு தாக்கப்பட்டு காயப்பட்டு இறந்தார் என்பதற்கு எந்தவொரு நேரடி சாட்சியமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு ஊரில் பாதுகாப்பில் இருந்த போலீசார் வந்தபின்னர், இறந்தவரின் சடலத்தை மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்றும், அடையாளம் தெரியாத நபர்கள் எனது மகனை கொலை செய்துவிட்டதாக அவர்களுக்கு முதல் தகவல் கிடைத்தது என்றும், அந்த சங்கதிகளை மறைத்துவிட்டு எங்கள் தூண்டுதலின் பேரில் அன்று மாலை 7 மணிக்கு மேல் பொய்யான புகார் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் இவ்வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல.

11) நான் சொன்னதுபோல், சொன்ன நாள் சொன்ன நேரத்தில் எனது மகன் கோழிப்பண்ணைக்கு செல்லவில்லை என்றும், சொன்ன இடத்தில், சொன்ன தினத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும், அதுகுறித்து நான் கேள்விப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதேபோல், எனது மகனுக்கும், எதிரி சரவணனுக்கும் இடையே வாகனத்தை சேதப்படுத்தியது சம்பந்தமாக முன்விரோதம் இருந்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நானும், எனது குடும்பத்தினரும் எதிரி சரவணன் மீது உள்ள உரிமையியல் பிரச்சனைகள் காரணமாக பொய்யாக ஒரு புகார் கொடுத்து அதற்கேற்ப பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**(2ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது)**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 8 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திருமதி.பொன்னுத்தாய் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of January 2026.

**(A1, A2 Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது அய்யாபுரத்தில் வசித்துவருகிறேன். சொந்தமாக கோழிப்பண்ணை வைத்து வியாபாரம் செய்துவருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன மாரிச்செல்வம் எனது மகனாவார். எனக்கு முப்புடாதி என்ற மற்றொரு மகனும் உண்டு. ஆஜர் எதிரிகளை தெரியும். எனது மகன்கள் இரண்டுபேரும் கோழிப்பண்ணையை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சுமார் மூன்றரை வருடங்களுக்கு முன்பு ஒருநாள், அய்யாபுரத்தை தாண்டி மெயின்ரோட்டில் வைத்து எனது மகன் மாரிச்செல்வம் கோழிப்பண்ணைக்கு செல்லும் வழியில் சாஸ்தா கோவில் அருகே எதிரி சரவணன் எனது மகனை வெட்டிக்கொலை செய்துவிட்டார். இந்த சம்பவத்தை நேரில் பார்த்த எனது மச்சான் மகன் முப்புடாதி சம்பவம் குறித்து என்னிடம் சொன்னார். உடனே நாங்கள் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு ஆம்புலன்சில் கிடத்தப்பட்டிருந்த எனது மகனின் உடலை பார்த்தோம். எனது மகனின் கை, கை விரல்கள், கழுத்து ஆகிய பகுதிகளில் வெட்டுக்காயம்பட்டிருந்தது. ஆம்புலன்ஸ் அருகே நானும் என்னுடைய உறவினர்களும் நின்று அழுதுகொண்டிருந்தபோது, எங்கள் ஊரை சேர்ந்த பிச்சமுத்து மகன் முப்புடாதி என்பவர் எங்கள் ஊர் காமராஜர் சிலை அருகே எனது மகன் மாரிச்செல்வம் இருசக்கர வாகனத்தில் வந்து நின்றுகொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரி முத்துக்குமார் தன்னுடைய செல்போனில் சரவணன் மாமா, மாரிச்செல்வம் என்னை கண்டபடி பேசிவிட்டான், அவன் அய்யாபுரம் ரோட்டில் சென்றுகொண்டுள்ளான், நீயும்அதே வழியில் வந்தால் அவனை முடித்துவிடலாம் என்று போனில் பேசியதை கேட்டதாக எங்களிடம் சொன்னார். சிறிது நேரத்தில் சரவணன் எனது மகன் மாரிச்செல்வத்தை வெட்டிவிட்டான் என்ற தகவலை கேள்விப்பட்டு முப்புடாதி மருத்துவமனை வந்ததாக எங்களிடம் சொன்னார்.

சம்பவத்திற்கு சில காலம் முன்னர் எனது மகன் மாரிச்செல்வத்திற்கும், எதிரி சரவணனுக்கும் ஜே.சி.பி வாகன டயரை சேதப்படுத்தியது சம்பந்தமாக ஒரு பிரச்சனை இருந்துவந்தது. அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு எனது மகன் மாரிச்செல்வம் சில காலம் சிறையில் இருந்தார். ஜாமீனில் எனது மகன் வெளியே வந்துவிட்டார். வழக்கு நிலுவையில் இருந்தது. அடிக்கடி எனது மகன் மாரிச்செல்வத்திடம் சரவணன், இழப்பீடு பணம் கொடு என்று கேட்டுவந்தார். அதை கொடுக்க முடியாது என என் மகன் சொல்லிவிட்டார். இந்த சங்கதி குறித்து என்னிடமும் எனது கணவரிடமும்

எங்கள் மகன் மாரிச்செல்வம் சொன்னார். இந்த முன் விரோதத்தின் காரணமாகத்தான் எனது மகன் கொலைசெய்யப்பட்டார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் முன்விரோதம் இருந்ததாக சொல்வதும், 1ம் எதிரி பணம் கேட்டார் என்று சொல்வதும்பொய் என்றால் சரியல்ல. இந்த விவரத்தை எனது மகன் எங்களிடம் சொன்னதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிலிருந்து சம்பவ இடத்திற்கு 2 நிமிடங்களில் நடந்துவந்துவிடமுடியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, இடையே எத்தனை வீடுகள் உள்ளன என்பதும் எனக்கு தெரியாது. நான் மருத்துவமனைக்கு சென்ற சமயத்தில் போலீசார் ஊருக்கு வந்துவிட்டார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நாங்கள் தோட்டத்திலிருந்து நேரடியாக மருத்துவமனைக்கு சென்றுவிட்டதால் ஊரில் நடந்த விவரம் எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். நானும், எனது கணவரும் நேரடியாக வீட்டிலிருந்து மருத்துவமனைக்கு சென்றோம். எனது மகன், யாரால் எவ்வாறு தாக்கப்பட்டு காயப்பட்டார் என்பதற்கு நேரில் சாட்சியம் கிடையாது என்றும், இந்த சம்பவத்தை கேள்விப்பட்ட நாங்கள் தோட்டத்திலிருந்து நேரே மருத்துவமனைக்கு சென்றோர்ம என்றால் சரியல்ல.

முத்துக்குமார் செல்போனில் பேசியதாக சொல்வதும், அதை கேட்டு வந்த முப்புடாதி எங்களிடம் சொன்னதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. முத்துக்குமாரை வழக்கில் சேர்க்கவேண்டும் என்பதற்காக இவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், என்னுடைய மகனுக்கும் ஊரில் நிறைய எதிரிகள் இருந்தார்கள் என்றால் சரிதான், ஆனால் அந்த பிரச்சனைகளை பேசிமுடித்துவிட்டோம். உள்ளூரில் உள்ள ஒரு பெண்ணிடம் எனது மகன் தவறாக நடந்து கொண்டது சம்பந்தமாக அந்த பெண்ணின் குடும்பத்தினர் எனது மகனின் மீது கோவத்தில் இருந்தார்கள் என்றால் அந்த பிரச்சனையையும் பேசி முடித்துவிட்டோம். எனது மகனை யார் தாக்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும், அதனை நான் மறைத்துவிட்டு

எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**(2ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது)**

**மறுவிசாரணை இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi